**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 24 September 2018



பட்டம் பெற்ற மகிழ்ச்சியைக் கொண்டாடும் மா. திருகுமரன்.
**படம்: திமத்தி டேவிட்**

# வெற்றி இலக்கிற்கு கல்வி ஒரு பாலம்

*வாழ்வில் வெற்றி இலக்கை அடைய கல்வி ஒரு முக்கிய பாலம் என்றால் அது மிகையன்று. அந்தப் பாலத்தை இந்த ஐந்து இளையர்களும் வெறுமனே கடந்துவிடவில்லை. கல்விப் பயணத்தின் அருமையை நன்கு அறிந்து, முழுமையாக அனுபவித்து அதைச் சிறப்புற நிறைவேற்றியுள்ளனர். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பயின்ற இந்த இளையர்கள் சிறப்புத் தேர்ச்சி அடைந்து பட்டம் பெற்றுள்ளனர். கல்வியில் மட்டுமின்றி பிற துறைகளிலும் அவர்களில் சிலர் சக்கைப்போடு போடுகின்றனர். இலட்சிய வேட்கையுடன் இருக்கும் இந்த இளம் சாதனையாளர்களின் வெற்றிப் பயணம் பற்றி தெரிந்து கொள்ளலாம்.*

**செய்தி: எஸ். வெங்கடேஷ்வரன், வைதேகி ஆறுமுகம்**



பட்டம் பெற்ற இதர மாணவர்கள். (இடமிருந்து) சிறப்புத் தேர்ச்சி பெற்ற டாக்டர் நிஷாந்த் தியாகராஜன், ரா. அரவிந்த், ஷாலினி பன்னீர்செல்வம், மா. ஷர்னி.
**படங்கள்: சிங்கப்பூர்த் தேசிய பல்கலைக்கழகம்**

## டாக்டர் நிஷாந்த் தியாகராஜன்

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் (என்யுஎஸ்) மருத்துவத்திலும் அறுவைச் சிகிச்சையிலும் தம் பட்டத்தைப் பெற்றதோடு வாய்ப்பாட்டிலும் பல விருதுகளைப் பெற்றவர் 24 வயது டாக்டர் நிஷாந்த் தியாகராஜான்.

2014ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெறும் வருடாந்திர ‘ஸ்பிரிட் ஆஃப் யூத்’ விழாவில் ஆகச் சிறந்த ஆண் பாடகராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே ஆண்டில் தேசிய கலைகள் மன்றம் ஏற்பாடு செய்த தேசிய இந்திய இசை விழாவில் கர்நாடக இசைக்கான பொதுப் பிரிவில் முதல் பரிசையும் டாக்டர் நிஷாந்த் தட்டிச் சென்றார்.

ஆறு வயதிலிருந்து வாய்ப்பாட்டுக் கலையைக் கற்று வரும் டாக்டர் நிஷாந்த், 17 வயதில் சிங்கப்பூர் இந்திய நுண்கலைக் கழகத்தில் ‘சங்கீத விஷாரத்’ என்ற தலைசிறந்த பட்டயத்தைப் பெற்றார்.

இசையில் மட்டுமின்றி படிப்பிலும் சிறப்பாகச் செயல்பட்டார் டாக்டர் நிஷாந்த். அவரின் ஐந்தாண்டு மருத்துவப் படிப்பில் கடைசி மூன்று ஆண்டுகளில் பல்கலைக் கழகத் துறைத் தலைவரின் பட்டியலில் இடம்பெற்றார். பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு நிலையிலும் கற்கும் மாணவர்களில் சிறந்த தேர்ச்சி பெறும் முதல் 5 விழுக்காட்டினருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள கிறிஸ்டியன் மெடிக்கல் காலேஜில் (சிஎம்சி) ஒரு மாதக் காலமாக மருத்துவக் கல்வி பெற்றார்.

தற்போது சிங்கப்பூர் பொது மருத்துவமனையில் தம் மருத்துவப் பயணத்தை தொடங்கியுள்ள டாக்டர் நிஷாந்த், இசைக் கலையிலும் தொடர்ந்து ஈடுபட்டு எதிர்காலத்தில் தமது முதல் இசைத் தொகுப்பை வெளியிடத் திட்டமிட்டுள்ளார்.

## ரா. அரவிந்த்

சிறு வயதிலிருந்தே பொம்மைக் கார்களைப் பழுதுபார்ப்பதில் அதிக ஆர்வம் கொண்ட ரா. அரவிந்த், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையைத் தேர்ந்தெடுத்து அதில் ஆக உயரிய பட்டத்தை இவ்வாண்டு பெற்றார்.

2015ஆம் ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளாக நிபுணத்துவம் வாய்ந்த பொறியாளர்கள் வாரியத்தின் உபகாரச் சம்பள விருதைப் பெற்ற 25 வயது அரவிந்த், கல்வியில் சிறந்து விளங்கியது மட்டுமல்லாமல் பொறியியல் சார்ந்த போட்டிகளிலும் தமது திறனை வெளிப்படுத்தியுள்ளார்.

அமெரிக்காவில் உள்ள மிச்சிகன் மாநிலத்தில் 2017, 2018ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற அனைத்துலகப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான பந்தய கார் பொறியியல் போட்டியில் தமது குழுவுடன் சேர்ந்து சிங்கப்பூரையும் தமது பள்ளியையும் பிரதிநிதித்தார் அரவிந்த்.

தமது விரிவுரையாளரின் தலைமையில் கார்கள் இயங்குவதற்கானவற்றைத் தயார்படுத்தும் இரண்டு மாதக் கடுமையான பயிற்சியை மேற்கொண்ட பிறகு இந்தப் போட்டிக்காக அரவிந்த் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஈராண்டுகளிலும் 4 நாட்களுக்கு நடத்தப்பட்ட இப்போட்டியில் வேகம் குறையாமல் 23 கிலோ மீட்டர் தூரத்திற்குச் செல்லக்கூடிய பந்தய காரை வடிவமைப்பதில் ஈடுபட்டார் அரவிந்த். மூன்றாம், நான்காம் ஆண்டு சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டுள்ள அவரது குழு, இவ்வாண்டு நடைபெற்ற போட்டியில் பொறியியல் வடிவமைப்புப் பிரிவில் முதல் ஐந்து இடங்களில் வந்தது.

“பந்தய கார் வடிவமைப்பு எனக்குப் பல வழிகளில் பயனளித்துள்ளது. குழு முயற்சி, பொறுமை, நேரத்தைச் சரியாக வகுத்து செயல்படுவது போன்றவற்றுடன் பொறியியல் துறை வேலைகளுக்குத் தேவைப்படும் திறன்களையும் நான் இந்தப் போட்டியின் மூலம் வளர்த்துக் கொண்டேன்,” என்று தமிழ் முரசிடம் பகிர்ந்து கொண்ட அரவிந்த் தன் பட்டப்படிப்பை முடித்து தற்போது ‘நியுடோனாமி’ (Nutonomy) எனும் நிறுவனத்தில் வேலையிடப் பயிற்சி பெற்று வருகிறார்.

## ஷாலினி பன்னீர்செல்வம்

தமது ஓய்வு நேரங்களில் சமூகச் சேவையில் ஈடுபட்டு வந்த 24 வயது ஷாலினி பன்னீர்செல்வம், அதைத் தமது வாழ்வின் முக்கிய அங்கமாக அமைத்துக் கொண்டார். சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் கலைகள் மற்றும் சமூக அறிவியல் பள்ளியில் சமூகப் பணி துறையில் படித்தார். அதில் அவர் சிறப்புத் தேர்ச்சி பெற்று ஹார்னஸ் பட்டத்தைப் பெற்றார்.

நீ ஆன் பலதுறைத் தொழிற்கல்லூரியில் உளவியில் பாடத்தைப் பயின்ற ஷாலினி தமது விடுமுறை நாட்களன்று ‘ஏவா’ (AWWA) என்றழைக்கப்படும் குடும்ப சேவை நிலையத்தில் குறைந்த வருமான குடும்பங்களுக்கும் குழந்தைகளுக்கும் உதவினார். அங்கே சமூக சேவையின் மீது தமக்கு ஏற்பட்ட ஆர்வத்தை வளர்க்க பல்கலைக்கழகத்தில் சமூகம் சார்ந்த பாடத்தை எடுத்து படித்தார்.

அக்கம்பக்கச் சுகாதாரப் பராமரிப்பு சேவைக்கான நிகழ்ச்சியில் அமைக்கப்பட்ட சமூக சேவை குழுவில் இருந்த ஷாலினி, யொங் லூ லின் மருத்துவப் பள்ளி மாணவர்களுடன் சேர்ந்து வசதி குறைந்தோருக்கு இலவச மருத்துவப் பரிசோதனைகளையும் தேவையான சமூக சேவைக்கான பரிந்துரையையும் கொடுத்து வந்தார்.

அவ்வப்போது ஏறத்தாழ 8 மணி நேரத்திற்கு அவற்றில் ஈடுபடவேண்டியது இருந்தாலும் தமது பாடங்களுக்கு நேரத்தைச் சரியாக ஒதுக்கி கல்வியில் கவனம் செலுத்தி வந்தார் ஷாலினி.

சமூக சேவை புரிந்ததன் மூலம் மனதிருப்தியையும் மகிழ்ச்சியையும் அடைந்த அவர் தற்போது ஒரு முழுநேர சமூக ஊழியராகப் பணிபுரிந்து வருகிறார். சமூக சேவையாற்ற நேரம் ஒரு தடையில்லை என்பதை உணர்த்தும் வகையில் வேலைக்கு அப்பாற்பட்டு தமது ஓய்வு நேரங்களிலும் அவர், சிண்டா எனப்படும் சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுச் சங்கத்தில் ஒரு தொண்டூழியராக இருந்து வருகிறார்.

## மா. ஷர்னி

மருத்துவராகும் கனவைத் தள்ளிவைத்துவிட்டு பேச்சு சிகிச்சைத் துறையில் மேற்படிப்பைத் தொடர முடிவெடுத்துள்ளார் 23 வயது மா. ஷர்னி. பேச்சு சிகிச்சையில் தன் முதுநிலைப் பட்டத்தை அடுத்த ஆண்டில் தொடங்கவுள்ள ஷர்னி, சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்திலிருந்து உயிரியல் துறையில் முதல் நிலை பட்டத்தை பெற்றவர்.

“ஜிசிஇ மேல்நிலை தேர்வில் நான் சராசரியாக தேர்ச்சி பெற்றாலும், அதில் கிடைத்த அனுபவமே என் பட்டப்படிப்பில் என் முழு முயற்சியை வெளிப்படுத்த ஊக்குவிப்பாக இருந்தது,” என்றார் ஷர்னி.

கேகே மகளிர்,சிறார் மருத்துவமனையில் சிசுக்களின் அவசரச் சிகிச்சை பிரிவில் கடந்த 30 ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் தமது தாயார்தான் தமது முன்மாதிரி என்றார் ஷர்னி.

“பேச்சு சிகிச்சை திறன்களுடன் பேச சிரமப்படுவோருக்கு உதவ விரும்புகிறேன்,” என்று கூறினார் செல்வி ஷர்னி.

## மா. திருகுமரன்

உயர்நிலைப்பள்ளியில் கல்வியில் குறைந்த மதிப்பெண்கள் பெற்று மனந்தளர்ந்துபோன மா. திருகுமரனை அவரது ஆசிரியர் தட்டி எழுப்பினார். பள்ளி முடிந்து அவர் கொடுத்த பயிற்சி திருகுமரனைக் கல்வியில் வெற்றியைச் சுவைக்க வைத்துள்ளது. என்யுஎஸில் அவர் கணினியல் துறையில் படித்து பட்டம் பெற்றார்.

தமக்கு தெரிந்த கணினியல் கல்வியைப் படிப்பதற்கு மட்டும் பயன்படுத்தாமல், பல போட்டிகளிலும் கலந்து கொண்டுள்ளார். டுனேக் (TUNAC) எனப்படும் அனைத்துல தகவல் அறிவியல் போட்டியில் கலந்துகொண்டு, அப்போட்டியின் இறுதிச் சுற்றுக்காக அமெரிக்காவிற்குச் சென்று முதல் பரிசை அவர் குழுவோடு கைபற்றினார்.

படிப்போடு நடனத்திலும் சிறந்து விளங்குகிறார் திரு திருகுமரன். ‘பிரேக் டான்ஸ்’ எனும் நடனத்தில் சக்கைப்போடு போடும் இவர் பல்கலைக்கழகத்தில் லத்தின் நடனத்தையும் கற்று பல போட்டிகளில் கலந்துகொண்டு, இரு தங்கப் பதக்கங்களையும் ஒரு வெள்ளி பதக்கத்தையும் வென்றுள்ளார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.